**ஊழியர் சேமலாப நிதியம் - 2011**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, ஊழியர் சேமலாப நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகிய ரூபா 76,304,000 பெறமதியான நிலையான சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இற்கமைய மீண்டும் பெறுமதியிடப்பட்டு கணக்கிலிடப்படவில்லை. இச் சொத்துக் கையிருப்பில் நூற்றுக்கு 50 சதவீதமாகத் தேய்மானம் மேற்கொள்ளப்பட்டு பெறமதி முற்றாகவே இல்லாதொழிந்ததும் இதுவரை பயன்படுத்தப்படாததுமான ரூபா 18,422,195 பெறுமதியுடைய கணனித் துணைப்பாகங்களது கையிருப்பும் உள்ளடங்கியிருந்தன.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் இயந்திர சாதனங்களைப் பழுதுபார்த்தல் என்பவற்றிக்குச் செலவிடப்பட்ட ரூபா 987,015 மற்றும் ரூபா 550,182 என்பன மூலதனச் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

## 1.2.3 தீர்த்து வைக்கப்படாத மீதி

---

**கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

(அ) தொழில் ஆணையாளர் நாயகத்தால் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக வழக்குத் தொடுத்தல் மூலமும் நிலுவையாக உள்ள தவணைப் பணமாக அறவிடப்பட்டதும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒவ்வொரு அங்கத்தவரதும் கணக்கில் செலவு வைக்கப்பட்டுத் தீர்த்து வைக்கப்படாததுமான ரூபா 4,671,769,511 மீதியிருந்தது. ‘‘நிதி நிர்வாகத்தின் நலிவு அல்லாததும் அதிகரித்துச் செல்லும் மற்றும் குறைந்து செல்லும் காரணங்களின் நிமித்தம் எதிர்பார்க்கக்கூடியதுமான இம் மீதியைக் துரிதமாகத் தீர்த்து வைப்பதற்கென செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டவாறுள்ளது’’ எனும் பதில் தொழில் ஆணையாளர் நாயகத்தாலும் இலங்கை மத்திய வங்கியாலும் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியமாக ஊழியர்களது கணக்குகளில் செலவு வைக்கப்பட்டுத் தீர்த்து வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த மீதி ரூபா 346,697,934 ஆகும். உரிமையாளர்களை இனங்காண்பதற்கான வேகத்தை அதிகரிப்பதற்குத் தற்போது கணனி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியவாறு இருப்பதால் எதிர்காலத்தில் இம் மீதி குறைவடையும்’’ எனத் தொழில் ஆணையாளர் நாயகம் இதற்குப் பதிலளித்திருந்தார்.

(இ) நிதியத்தின் ஆரம்பந்தொட்டு அதிகரித்தவாறிருந்ததும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 1,187,649,767 ஆன குறைவு அதிகரிப்பு பங்களிப்புத் தொகைக் கணக்கு மீதியைத் திர்த்து வைக்காமையால் நிதியத்திலிருந்து நலன்பெறுவர்களது பெறுவனவுகள் தாமதமடைவதற்கும் கிடைக்காது போவதற்கும் காரணமாயமைந்தது ‘‘தொழில் வழங்குபவர்களது செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் இம் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு ஊழியர் சேமலாப நிதியத்தால் மாத்திரம் முடியாது எனவும் தகவல்களைப் பிழையின்றி குறிப்பிடாது போகும் தொழில் வழங்குபவர்களுக்குத் தண்டனை வழங்கும் முறை ஒன்றை ஏற்படுத்த அதிகாரச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது கவனத்திற் கொள்ளப்படலாம் எனவும் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் இம் மீதியைத் திர்த்து வைப்பதற்குத் தன்னிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி

ஆவன செய்வதாகவும்'' இதற்குப் பதிலளிக்குமுகமாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த கோரிக்கை அற்ற நலன் கணக்கிலும் தேங்கி நின்ற கணக்கிலும் இருந்த மீதிகள் முறையே ரூபா 120,476,638 மற்றும் ரூபா 13,160,111 என்பனவாகும். ''காசோலைகளின் செல்லுபடிக் காலம் நிறைவடைதல் மற்றும் நலன்களைப் பெறுபவர்களது விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் வங்கியின் கணக்குத் தகவல்களில் உள்ள தவறுகள் காரணமாக ஏற்பட்டுள்ள கோரிக்கை அற்ற நலன் கணக்கு மீதிகளுக்குரிய தகவல்கள் தொழில் ஆணையாளரினால் திருத்தஞ் செய்யப்பட்டதையடுத்து மீண்டும் துரிதமாகக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும்''

மரணமுற்ற அங்கத்தவர்களில் தங்கியிருப்போருக்கு உரித்துடையதான தொழில் ஆணையாளரின் கட்டளைப் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தேங்கி நிற்கும் நலன் கணக்கு மீதியானது மீண்டும் தொழில் ஆணையாளரது கட்டளைப் பெறப்பட்டதையடுத்து தீர்த்து வைக்கப்படுவதாகவும் இது ஊழியர் சேமலாப நிதியத்தின் தற்றுணிபின் பேரில் தீர்த்து வைக்கப்பட முடியாத உள்ளகச் செயற்பாட்டு நடைமுறைகளில் உள்ள குறைவுகள் அல்ல'' எனவும் இதற்குப் பதிலளிக்குமுகமாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

---

ஊழியர் சேமலாப நிதியத்தின் தொழில் திணைக்களத்திற்குரிய ரூபா 959,246,218 க்கான நிலையான சொத்துக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய ரூபா 480,309,648 தொகையினதான திரண்ட மீதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான முறையான பொருட் கணிப்பு அறிக்கைகள் மற்றும் விரிவான பட்டோலைகள் என்பவற்றைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| **(அ)** | 1981 இன் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகையைக் குறித்த தினத்தில் செலுத்தத் தவறுமிடத்து தண்டப்பணம் அறவிடப்படுவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் தரவுத் தொகுப்பு முறைமையுடன் நடாத்தப்பட்ட தெரிவுச் செவ்வைகளின் போது நிதியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 129 நிறுவனங்களிலிருந்து 2009-2011 காலப்பகுதிக்கென அறவிடப்பட வேண்டிய ரூபா 101,140,260 தண்டப்பணமானது மீளாய்வாண்டு முடிவிலும் அறவிடப்படாதிருந்தது. |
| (ஆ) | **இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள்**<br>நி.பி 1645 (அ)(ஆ) மற்றும் 1646 | முப்பத்தொன்பது வாகனங்களது சம்பவக் குறிப்பேட்டுப் புத்தகங்கள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தப் பொழிப்பும் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதியத்தின் இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தர்களது சேவை வருமானத்தின் மீது அறவிடப்பட வேண்டிய உழைக்கும்போதே செலுத்தும் வரியான ரூபா 1,395,505 குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

-------------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டினால் விளைந்த நிகர விளைவு வருமான வரிக்குப் பின்னர் 107,202.066,499 மிகையாக அமைந்தது. இதற்கொப்பான முன்னைய ஆண்டின் தேறிய மிகை ரூபா 111,445,011,747 ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது தேறிய மிகையில் ரூபா 4,242.945,248 குறைவு தென்படுகின்றது. முதலீட்டு வருமானம் ரூபா 5,049,303,683 குறைவுற்றதானது நிதிசார் விளைவுகளில் குறைவுக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வடகொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்திற்குரிய செயற்பாட்டில் உள்ள தொழில் வழங்கும் 7543 நிறுவனங்களில் 2632 நிறுவனங்கள் மாத்திரமே மீளாய்வாண்டு முடிவில் தொழில் உத்தியோகத்தர்களது பரீசீலனைக்கு

உட்பட்டிருந்தன. எஞ்சிய 4911 நிறுவனங்கள் அல்லது நிறுவனங்களது எண்ணிக்கையில் 65 சதவீதம் ஓராண்டிற்கும் மேற்பட்ட காலப்பகுதியின் போது தொழில் உத்தியோகத்தர்களது பரீசீலனைக்கு உள்ளாகியிருக்கவில்லை. இதற்குப் பதிலளித்த தொழில் ஆணையாளர் நாயகம், ‘‘திணைக்களச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் களத் தொழில் உத்தியோகத்தரால் ஆண்டொன்றிற்கு ஏறக்குறைய 2880 நிறுவனங்கள் நிரந்தர பரீசீலனைக்குள்ளாகின்றன’’ எனவும் தெரிவித்திருந்தார்.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தின் 2 மாவட்டத் தொழில் அலுவலகங்களுக்குரிய தொழில் வழங்கும் நிறுவனங்கள் 337 சந்தர்ப்பங்களில் நிலுவையாக உள்ள உதவு தொகையையும் தண்டப் பணத்தையும் அறவிடுவதற்கு மேற்கொண்ட நீதிமன்ற நடவடிக்கைகள் இடையே தடைப்பட்டதால் புதிதாக அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 92,097,672 உதவு தொகையும் தண்டப் பணமும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குக் கிடைக்காது போயிற்று

(இ) மஹரகம மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குரிய தொழில் வழங்கும் நிறுவனங்களிலிருந்து ஊழியர் சேமலாப நிதியம் அறவிட வேண்டிய ரூபா 204,584,371 நிலுவையாகவுள்ள உதவு தொகையும் தண்டப்பணமும் அறவிடப்படுவதற்கு ஆரம்ப மற்றும் இறுதி அறிவிப்புகளை அனுப்பிவைத்து நெடுங்காலம் கழிந்துள்ளபோதும், நிலுவையாக உள்ள உதவு தொகையை அறவிடுவதற்கோ அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ 2012 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஈ) வட கொழும்பு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 47 தொழில் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடைய ரூபா 13,249,417 உதவு தொகை மற்றும் தண்டப் பணம் ஆகியவற்றை அறவிடுவதற்கு 2012 ஜூன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்குப் பதிலளித்த "தொழில் ஆணையாளர் நாயகம் பதவியணியினர் பற்றாக்குறை உள்ளமையால் நடவடிக்கைகள் தாமதமாகிய போதும், இந் நடவடிக்கைகளை 6 மாதத்திற்குள் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

(உ) கண்டி வடக்கு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குரிய 55 நிறுவனங்களில் 4 ஆண்டுகளாக ஊழியர் சேலாப நிதியத்தின் உதவு தொகையாக அறவிடப்பட வேண்டிய ரூபா 44,679,953 மற்றும் தண்டப் பணமாகிய ரூபா 14,423,022 என்பவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கண்டி வடக்கு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குக் சொந்தமான 2 தொழில் வழங்கும் நிறுவனங்களுக்கு பிடி ஆணை பிறப்பிக்கப்பட்ட போதும், மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 3688 மற்றும் 74135 இலக்க வழக்குகள் மூலம் அறவிடப்படக்கூடிய ஊழியர் சேமலாப நிதியமாகிய ரூபா 1,692,078 (ரூபா 767,996 மற்றும் ரூபா 924,082 மொத்தமாக) இதுவரை அறவிடப்பட முடியாதிருந்தது. இதற்குப் பதிலளித்த தொழில் ஆணையாளர் நாயகம் " 3688 ஆம் இலக்க நிறுவனத்தின் உரிமையாளர் வெளிநாடு சென்றுள்ளதால் பிடி ஆணையைச் செயற்படுத்த முடியாதுள்ளது என்றும் 74135 ஆம் இலக்க நிறுவனம் 13 ஆண்டுகளுக்கு முன்பே மூடப்பட்டு விட்டதால் வழக்கில் எதிராளிகள் சமூகமளிக்காது அதன்

காரணமாக திறந்த பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும்'' தெரிவித்திருந்தார்.

(எ) கண்டி தெற்கு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குரிய தொழில் வழங்கும் நிறுவனங்கள் போதியளவு விடயங்களை நீதிமன்றங்களுக்கு வழங்காமை, தகவல்களை நாளது வரையாக்காதுவிட்டமை மற்றும் முறையாகக் கவனஞ் செலுத்தாமை போன்ற காரணங்களால் நடவடிக்கைகள் முடிவுக்கு வராத 32 நீதிமன்ற நடவடிக்கைகளால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 20,478,379 ஆகும்.

(ஏ) கண்டி தெற்கு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய 22 நிறுவனங்களினது நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையால் 2012 ஜூன் 30 ஆம் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்த உதவு தொகை மற்றும் தண்டப்பணம் ரூபா 143,455,982 ஆகும். இவ்வாறாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பதற்கு தொழில் அமைச்சும் பெருந்தோட்டத் துறை அமைச்சும் உடன்பட்டுள்ள என்று தொழில் ஆணையாளரின் 2006 ஜூலை 19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த உடன்பாடு காரணமாக 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இத் தோட்டக் கம்பனிகளில் உள்ள ஊழியர்களது தனிப்பட்ட வேதனத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 22,853,700 இற்கான நலனையேனும் பெறமுடியாது போயிற்று. இதன் மூலம் 55 வயதைப் பூர்த்தி செய்யும் மற்றும் மரணமடையும் ஊழியர்களினது உதவு தொகை இழப்பிற்குள்ளாகும் அபாயகரமான நிலைமை உருவாகியிருந்தது.

(ஐ) கண்டி தெற்கு கம்பொலை தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குரிய தோட்டமொன்றில் இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டு 9 முதல் 12 மாதங்களாகிவிட்ட ஊழியர் சேமலாப நிதியத்தினால் அறவிட வேண்டிய ரூபா 10,151,794 உதவு தொகையும் தண்டப்பணமாகிய ரூபா 4,152,001 என்பனவும் அம்பலுவாவ பயோடைவர்சிட்டி நிறுவனத்தின் -- 2004 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்பட வேண்டிய 18 பதவியணியினருக்குரிய உதவு தொகையும் தண்டப் பணமுமாகிய ரூபா 1,572,120 என்பனவுமாக ரூபா 15,875,915 கூட்டுத்தொகையானது 2012 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தது.

(ஒ) ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களை மீண்டும் பதிவு செய்யும் செயற்திட்டத்திற்கென தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2010 நவம்பர் 23 ஆந்

திகதியன்று உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை முறையே ரூபா 6,467,403 மற்றும் ரூபா 603,948 என்பனவாகும். 2012 ஆம் ஆண்டு முடிவிலும் அச் செயற்திட்ட வேலைகள் பூர்த்தியாகவில்லை. அச் செயற்திட்டத்திற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,457,195 பெறுமதியான இயந்திரமும் திணைக்களத்தில் பயனற்றவாறிருந்தது.

(ஓ) கணனித் தொகுப்புத் தரவுகளின்படி, கொழும்பு கிழக்கு மாவட்ட தொழில் அலுவலகத்தின் 6 ஆம் இலக்க வலயத்திற்குரிய செயற்பட்டவாறிருக்கும் 10 தொழில் வழங்கும் நிறுவனங்களிலிருந்து ஏறக்குறைய 12 ஆண்டுகளாகவும் மேலும் 9 நிறுவனங்களிலிருந்து 3 முதல் 7 ஆண்டுகளாகவும் ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகை 2012 ஜூன் 30 வரை அறிவிடப்படாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

### 3.1.1 செயற்பாட்டுச் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய செயலாற்றல் நிலைமை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| விபரம் | உள்ளபடியான எண்ணிக்கை | நிதிய நடவடிக்கைகளுக்கு உரிய எண்ணிக்கை | அதன் சதவீதம் |
|---|---|---|---|
| தனியார் மற்றும் அரைப்பங்களவிலான அரச நிறுவன ஊழியர்கள் | 3,414,944 | 2,300,000 | 67.35 |
| தொழில் வழங்குவோர் | 228,926 | 66,350 | 28.98 |
| நிதியத்தின் அங்கத்தவர்களது கணக்குகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 13.6 | 2.3 | 16.91 |

2011 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் சுய தொழில் புரிவோரது எண்ணிக்கை 2,427,705 ஆகவிருந்தது. இச் சுய தொழில் புரிவோரது நலனுக்காக நிதியம் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டதற்கான அறிக்கைகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

(தோற்றுவாய் : இலங்கை மத்திய வங்கி 2011)

**(ஆ) அங்கத்தவர்களுக்கான நலன்**

| ஆண்டு | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|
| | % | % | % | % | % |
| வழங்கப்பட்ட நலன் சதவீதத்தில் | 11.5 | 12.5 | 13.75 | 13.2 | 11.2 |

2011 ஆம் ஆண்டில் முதலீட்டு வருமானம் ரூபா 5,049,303,683 குறைவடைந்திருந்தது. அங்கத்தவர் நிதியத்தில் ரூபா 110,734,645,618 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இதனால் 2010 ஆம் ஆண்டினைப் பார்க்கிலும் 2011 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களினது நலன் 1 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**3.1.2 முதலீடும் முதலீட்டு வருமானமும்.**

ஊழியர் சேமலாப நிதியம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்குச் சந்தையில் 74 கம்பனிகளில் ஒட்டுமொத்தமாக நெடுங்கால மற்றும் குறுகிய கால ரூபா 73,948,947,927 முதலீடு செய்திருந்தது. இது தொடர்பாகவும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஜனவரி 15 ஆந் திகதியளவில் ஊழியர் சேமலாப நிதியம் பங்குச் சந்தையில் 76 கம்பனிகளின் நெடுங்கால குறுகிய கால முதலீடுகளிலிட்ட தொகை ரூபா 63,169,398,923 ஆகும். இதில் 58 கம்பனிகளின் ரூபா 54,006,955,606 முதலீட்டுப் பெறுமதி ரூபா 11,737,841,979 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) வானூர்திக் கம்பனி ஒன்றில் 2010 ஜூலை மாதத்தில் மேற்கொண்ட முதலீட்டின் போது ரூபா 500,000,000 கொடுப்பனவு செய்து கொள்வனவு செய்த 1,863,676 கூறுகளுக்கு முதலீடு செய்த தினத்திலிருந்து 2012 ஜூன் 30 வரை நிதியம் வருமானம் எதையும் பெற்றிருக்கவில்லை. இது தொடர்பாகப் பதிலளித்த

இலங்கை மத்திய வங்கி ‘‘நட்டமளிக்கும் முறையில் குறைந்து செல்லும் இக் கம்பனியிலிருந்து எதிர்காலத்தில் இலாபத்தைப் பெறலாம் எனும் நம்பிக்கை உள்ளது’’ எனத் தெரிவித்திருந்தது.

(இ) மின்சாரக் கம்பனி ஒன்றில் 2007 ஏப்ரல் தொடக்கம் 2008 நவம்பர் வரையான காலப்பகுதியின் போது 29,750,000 கூறுகளில் முதலீடு செய்த ரூபா 2,975,000,000 தொடர்பாக நிதியத்திற்கு 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் வருமானம் எதுவும் கிட்டவில்லை. 2011 ஆம் ஆண்டில் மாத்திரம் 2 தடவைகள் பங்கிலாப வருமானமாக ரூபா 540,909,091 பெறப்பட்டிருந்தது. முதலீட்டுக் காலவரம்புக்கமைய இவ் வருமானப் பெறுவனவு ஏறத்தாழ வருடாந்தம் 4 சதவீதமாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 216,363,636 வருமானத்துடன் சேர்த்து இக் கம்பனியிலிருந்து பெற்ற வருடாந்த வருமான சதவீதம் நூற்றுக்கு 4.9 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. இக் கம்பனி குறிப்பிடத்தக்க வருமானத்தைச் சம்பாதிக்கும் மட்டத்திலிருப்பதால் 2013 ஆம் ஆண்டின் போது போதியளவு பங்கிலாபத்தை நிதியம் பெறக்கூடிய வாய்ப்பு நிலவுகின்றது’’ என இதற்குப் பதிலளித்த இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

(ஈ) 2011 பெப்ரவரி 23 தொடக்கம் 2011 நவம்பர் 01 வரையான காலப்பகுதியின் போது குறிப்பிட்டதொரு நிதிக் கம்பனியினது 5,091,200 பங்குகளில் ரூபா 205,489,613 முதலீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாக முதலீடு செய்யத் தீர்மானித்த சந்தர்ப்பத்தில் அக்கம்பனி இறுதியாக வெளியிட்ட கணக்குகளில் புலனாகிய ரூபா 4,285,937,284 நட்டத்தைக் கவனத்திற்கொள்ளவில்லை. மீளாய்வாண்டு முடிவிலும் இக் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 3,830,135,175 ஆகும். இக் கம்பனியின் பங்கு ஒன்று ரூபா 40.36 சராசரி விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2012 ஜூலை 31 ஆந் திகதியளவில் இப் பங்கு ஒன்றினது சந்தைப் பெறுமதி ரூபா 24 ஆகும். முதலீடு செய்த தினத்திலிருந்து இம் முதலீட்டால் எதுவித வருமானத்தையும் நிதியம் பெற்றிருக்கவில்லை.

(உ) நிதியமானது ரூபா 680,232,419 செலவழித்து ஊடகக் கம்பனி ஒன்றில் 20,942,989 பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தது. அப் பங்குகள் 2009 தொடக்கம் பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்படாமையால் மூலதன இலாபத்தை நிதியம் பெற முடியாது போயிருந்தது. இம் முதலீட்டினால் குறித்த கால வரம்பிற்குள், அதாவது, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நூற்றுக்கு 3.39 சதவீதப்படியும் 2010 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 0.81 மற்றும் 2011 ஆம் ஆண்டில் 1.67 என பங்கிலாப

வருமானத்தை ஈட்டிய போதும், அவ் வருமானம் முதலீடு செய்த தொகைக்குப் போதுமானதாக இருக்கவில்லை. ‘‘இலங்கைப் பொருளாதார நடைமுறைகளில் ஊடகத் துறை மேலும் முன்னேறிச் செல்வதால் எதிர்காலத்தில் இக் கம்பனியால் நிதியத்திற்குப் பெறப்படும் பங்கிலாபம் மற்றும் மூலதன இலாபம் என்பன உயர்ச்சியடையும் எனும் நம்பிக்கை உளது’’ என இதற்குப் பதிலளித்த இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

(ஊ) ஊழியர் சேமலாப நிதியம் 2008, 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 3.890,902,522 ரூபா 6,877,822,908 ரூபா 39,133,587,926 ரூபா 73,948,947,927 எனப் பங்குச் சந்தையில் முதலீடு செய்திருந்தது. அம் முதலீடுகளுக்குப் பெறப்பட்ட வருமானம் 2008, 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் முறையே நூற்றுக்கு 8.94 சதவீதமாகவும் நூற்றுக்கு 24.18, நூற்றுக்கு 6.84 சதவீதமாகவும் மற்றும் நூற்றுக்கு 4.08 சதவீதமாகவும் காணப்பட்டன.

(எ) 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது, 11 கம்பனிகளின் பங்குச் சந்தைகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபா 3,555,864,821 ஆகும். இம் முதலீட்டால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதுவித வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

(ஏ) இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் ஹோட்டல்கள் மற்றும் போக்குவரத்துத் துறை முதலீடுகளை அதிகரிப்பதற்காக வழங்கப்படும் அறிவுறுத்துரைகளுக்கமைய, 2010 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 18 ஹோட்டல்கள் கம்பனிகளில் ரூபா 3,882,771,148 மற்றும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 16 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 7,219,711,548 என முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டிற்கு 2011 ஆம் ஆண்டில் ரூபா 50,807,109 அல்லது முதலீட்டுக்கு நூற்றுக்கு 1.31 சதவீதமும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டுக்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 173,616,783 அல்லது முதலீட்டிற்கு நூற்றுக்கு 2.4 சதவீதம் என வருமானம் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை மத்திய வங்கியினது நிதிச் சபை 2010 மே 05 அன்று தீர்மானித்தவாறு 2007, 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 520.49 மில்லியன், ரூபா 405.38 மில்லியன் ரூபா 298.85 மில்லியன், ரூபா 147.02 மில்லியன் என நட்டமீட்டியமையும் அந்த ஆண்டுகளின் போது முறையே (3.15) (3.45) (1.9), 0.13 என்றவாறு வருமானத்தை

ஈட்டும் விகிதம் சாதகமற்ற மட்டத்தில் இருந்த ஹோட்டல் கம்பனி ஒன்றில் 2010 மே 31 ஆந் திகதியளவில் ரூபா 810,321,610 முதலீடு செய்யப்பட்டிருந்தது. அத் தினத்தன்று இந்தக் கம்பனி கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த கடன் தொகை கிட்டத்தட்ட ரூபா 6.28 மில்லியன் ஆகும். குறித்த முதலீட்டுத் திகதியிலிருந்து 2013 ஜூன் 30 வரை இக் கம்பனியிடமிருந்து எதுவித வருமானத்தையும் நிதியம் பெறவில்லை. ''கொழும்பு நகரின் கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ள இந்த ஹோட்டல் கம்பனிக்கு சுற்றுலாத் துறையில் ஏற்படும் அதிகரிப்பின் வாயிலாக அதிகரித்த பெறுபேறுகளைப் பெறுவதை எதிர்பார்க்கலாம்'' என இதற்குப் பதிலளித்த இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

(ii) நிதியம் ரூபா 1,129,755,045 முதலீடு செய்திருந்த வேறு 2 ஹோட்டல் கம்பனிகளிலிருந்து 2011, 2012 ஆம் ஆண்டுகளில் வருமானம் எதனையும் பெறவில்லை. ''இம் முதலீடுகள் சுற்றுலாத்துறையில் ஏற்படும் அதிகரிப்புடன் உருவாகும் நலன்களை நோக்காகக் கொண்டு நெடுங்கால முதலீட்டுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் எனவும் இம் முதலீடுகள் எதிர்வரும் ஆண்டுகளில் நிதியத்திற்குப் பெருமளவு நலன்களைத் தர வல்லன'' எனவும் இதற்குப் பதில் அளித்த இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

(iii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 4 ஹோட்டல் கம்பனிகளிலான முதலீடுகள் போதிய வருமானத்தைப் பெற்றிராததுடன் அவ் வருமானச் சதவீதமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **ஹோட்டல் கம்பனி** | **2011.12.31இல் உள்ளவாறான முதலீடு** | **வருமானம்** | **வருமான சதவீதம்** | **2010.12.31இல் உள்ளவாறான முதலீடு** | **வருமானம்** | **வருமான சதவீதம்** |
|---|---|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | % | **ரூபா** | **ரூபா** | % |
| A | 702,115,954 | 14,699,144 | 2.09 | 302,991,992 | இல்லை | - |
| B | 54,108,598 | இல்லை | - | 54,310,045 | 105,715 | 0.19 |
| C | 4,183,849 | 60,700 | 0.01 | 4,183,849 | 36,420 | 0.87 |
| D | 182,268,900 | 482,761 | 0.26 | 194,331,840 | 1,707,868 | 0.88 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 942,677,301 | 15,242,605 | 1.62 | 555,817,726 | 1,850,003 | 0.33 |
| | ========= | ======= | ====== | ========= | ====== | ======= |

(iv) 2012 ஜூன் 30 ஆந் திகதியளவில் நிதியம் ரூபா 7,560,267,157 முதலீட்டை மேற்கொண்டிருந்தது. மேலே குறிப்பிட்ட 16 ஹோட்டல் கம்பனிகளில் 13 கம்பனிகளது பங்குகளது சந்தை விலை ரூபா 1,605,197,185 குறைவடைந்தமையால் அக்கம்பனிகளது பங்குகளை விற்பதால் மூலதன இலாபத்தைப் பெறுவது நிச்சயமற்றதாகியது

" சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்தைப் பார்க்கும் போது பங்குச் சந்தை மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பும் தன்மையால் சகல ஹோட்டல் கம்பனிகளதும் பங்குகள் உயர்வடைவதை எதிர்பார்க்கலாம்'' என இதற்குப் பதிலளித்த இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

(v) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 127,412,780 முதலீடு செய்யப்பட்டிருந்த ஹோட்டல் கம்பனி ஒன்றிலிருந்து 2011 ஆம் ஆண்டில் இலாபம் எதுவும் பெறப்படவில்லை.

(ஐ) ஊழியர் சேமலாப நிதியத்தில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகபூர்வமாக நிரல்படுத்தப்பட்ட 65 கம்பனிகளில் ஒட்டு மொத்தமாக முதலீடு செய்யப்பட்ட நெடுங்கால முதலீடுகள் ரூா 73,122,216,934 ஆகும். அம் முதலீடுகளில் ரூபா 58,349,901,901 முதலீடுகள் 21 கம்பனிகளில் இருந்ததுடன் அக் கம்பனிகளிலான முதலீடுகளுக்கு 2012 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 0.37 சதவீதம் தொடக்கம் நூற்றுக்கு 8.79 சதவீதம் வரையிலான வருமானம் பெறப்பட்டிருந்தது.

(ஒ) பங்குச் சந்தைகளில் பங்குகளின் விலை துரிதமாக வீழ்ச்சியடைந்தவாறிருக்கையில், 2011 திசெம்பர் முதல் 2012 ஜூன் 30 வரையிலான காலப்பகுதியில் 43 கம்பனிகளில் புதிய முதலீடாக 111,742,387 பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,657,803,132 முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2012 ஜூன் 30 ஆந் திகதியளவில் அக் கம்பனிகளில் 30 கம்பனிகளது பங்கு விலை குறைவடைந்தமையால் ஏற்பட்ட தேறாத நட்டம் ரூபா 340,768,531 ஆகும். இக்கம்பனிகளில் 24 கம்பனிகளது பங்குவிலைகள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பங்குச் சந்தையில் சரிவடைந்த நிலையில் இருந்தனவாகும் " நெடுங்கால முதலீடுகளின் பொருட்டு பங்குச் சந்தையில் தேறாத இலாபத்தை அல்லது நட்டத்தைக் கருத்திற்கொள்வது

உசிதமானதல்ல என்பது இலங்கை மத்திய வங்கியின் கருத்தாகும்" என இதற்குப் பதிலளித்த இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

(ஓ) ஊழியர் சேமலாப நிதியத்தில் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 73,948,947,927 முதலீடு செய்திருந்த 74 கம்பனிகளுள் 2012 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்த 7 கம்பனிகள் நட்டத்தில் இயங்கியவை ஆகும். அக் கம்பனிகளில் இருந்த நிதியத்தின் முதலீடு ரூபா 1,711,538,303 ஆகும். எஞ்சிய 71 கம்பனிகள் 2011/12 ஆம் ஆண்டில் இலாபத்தை ஈட்டியிருந்தன. எனினும், அக்கம்பனிகளுள் 66 கம்பனிகள் மாத்திரமே பங்கிலாபத்தை வெளியிட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டில் அக் கம்பனிகள் வெளியிட்ட பங்கிலாபப்படி ஊழியர் சேமலாப நிதியம் பெற்ற பங்கிலாபம் ரூபா 1,638,242,546 ஆகும். இப் பங்கிலாபத்தால் பெற்ற வருமானம் முதலீட்டுத் தொகையில் 2.21 சதவீதம் ஆகும்.

(ஔ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 5(இ) பிரிவின் மூலம் நிதியத்திற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் 5 (உ) பிரிவின் வாயிலாக மேலதிக தொகை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் என்பன அமுலாக்கப்படுகையில் அதிகாரச் சட்டத்தின் 4(1) பிரிவின் மூலம் தொழில் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் அதிகாரச் சட்டத்தின் 5(ஔ) பிரிவின் வாயிலாக குறித்த அமைச்சருக்கு உள்ள அதிகாரங்கள் தொடர்பாகவும் கருத்திற் கொள்ளப்பட்டு ரூபா 987,966,359,597 க்கான முதலீட்டு நடவடிக்கையின் போது அவர்களது பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக் கொள்வதற்கான முக்கியத்துவம் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படவில்லை.

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நிதியப் பணிகளுக்கான மாதிரிப் படிவங்களை அச்சிடுவதற்கு 2008 ஆம் ஆண்டில் ரூபா 21,884,084 பெறுமதியான அச்சு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டபோதும், மாதிரிப் படிவங்களை அச்சிடுவதற்கு 2011 ஆம் ஆண்டில் அரசாங்க அச்சகத்திற்கு ரூபா 4,487,163 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பமாகி கட்டிடத்தின் ஆரம்ப வேலைகளுக்கு 2010, 2011 ஆம்

ஆண்டுகளில் முறையே ரூபா 48,702,131. ரூபா 263.947,069 என மொத்தமாக ரூபா 312,649,200 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இக் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் இடையே நிறுத்தப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டில் கட்டிட வாடகையாக ரூபா 71,257,404 இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியத்தில் நிலவும் கீழே குறிப்பிடப்பட்ட 117 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் இயலாதிருந்தது.

| | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** | **உள்ளபடியான எண்ணிக்கை** | **வெற்றிட எண்ணிக்கை** |
|---|---|---|---|
| நிறைவேற்றுதரம் | 30 | 19 | 11 |
| நிறைவேற்றுதரம் அல்லாத தரம் | 188 | 100 | 88 |
| கனிஷ்ட தரம் | 42 | 24 | 18 |
| மொத்தம் | 260 | 143 | 117 |

இதற்குப் பதிலளித்த தொழில் ஆணையாளர் நாயகம் ‘‘வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் உத்தியோகத்தர்களை வழங்காமையால் இவ் வெற்றிடங்கள் நிலவுகின்றன.’’ எனத் தெரிவித்திருந்தார்.

(ஆ) தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியத்தினது செலவினம் வருடாந்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் பாரளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கியினது ஊழியர் சேமலாப நிதியத்தின் செலவினம் பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு உட்படாததால் இலங்கை மத்திய வங்கியின் பதவியணியினரது கிரயமாக 2011 ஆம் ஆண்டில் ரூபா 214,714,011 செலவிடப்பட்டிருந்தது. எனினும், இலங்கை மத்திய வங்கியின் பதவியணியினரால் 13 கடமைகள் நிறைவேற்றப்படாது அவை 11 வெளிநபர்களால் நிறைவேற்றப்பட்டிருந்தன. இதற்கென 2011 ஆம் ஆண்டில்

ரூபா 42,149,957 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறாக வெளி நபர்கள் மூலம் நிறைவேற்றப்படும் சில நடவடிக்கைகள் காரணமாக நிதியத்தின் இரகசியத்தன்மை வாய்ந்த தகவல்கள் அந் நபர்களைச் சென்றடைவதற்கு வாய்ப்புள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 ஒன்றிணைந்த செயல் திட்டம்

தொழில் திணைக்களம் ஊழியர் சேமலாப நிதியத்தின் பொருட்டு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை மத்திய வங்கியால் தயாரிக்கப்பட்ட 2013 – 2017 க்கான கூட்டிணைந்த ஊழியர் சேமலாப நிதியத்தின் தொழிற்பாடுகள் குறித்த திட்டமும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தைச் செயலில் ஈடுபடுத்துவதற்கான உள்ளகக் கணக்காய்வு தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆளணி பற்றாக்குறை காரணமாக நிதியத்தின் வரையறைக்குட்பட்ட பகுதி மாத்திரமே கணக்காய்விற்குள்ளாகியது.

நிதியத்தின் நிர்வாகத்திற்குரிய உள்ளகக் கணக்காய்வு இலங்கை மத்திய வங்கியினால் தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா 7,314,048 ஆகும்.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்

குறிப்பிடப்பட்டவாறு, தொழில் அமைச்சும் தொழில் திணைக்களமும் ஊழியர் சேமலாப நிதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தியிருந்தன. இக் குழுவில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியம் பங்கேற்றிருக்கவில்லை.

### 4.4 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறிப்பிட்டதொரு தொழில் வழங்கும் நிறுவனம் தனது ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிய உதவு தொகையான ரூபா 3,608,667 போலியான ‘‘சீ’’ அறிக்கையின் மூலம் தனது உறவினரின் தனிப்பட்ட கணக்கில் செலவு வைக்கப்படுவதற்கு ஏதுவான தொழில் உத்தியோகத்தரிடமிருந்து குறித்த தொகை சட்ட ரீதியாக அறவிடப்பட்ட போதும், அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை 2013 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் நிறைவேறாதிருந்தது. (2006-2.5(அ)

(ஆ) 1995 – 2003 வரையான காலப்பகுதியின்போது முடிவடைந்த வழக்குகளில் கண்டி நீதவான் நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட ரூபா 16,803,661 உதவு தொகையும் தண்டப் பணமும் நீதவான் நீதிமன்றத்திலிருந்து பெறப்படவில்லை. (2006 – 2.5 ஆ)

(இ) 1994 ஜனவரி 31 அன்று ஒரு கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டு 1997 ஏப்ரல் 01 ஆந் திகதியன்று வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்த நிதிக் கம்பனி ஒன்று 1997 திசெம்பர் 03 ஆந் திகதியன்று ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகைக்குள்ளானது. அக்கம்பனியினது ஊழியர் சேமலாப உதவு தொகை மற்றும் தண்டப் பணமாக ரூபா 48,461,705 நிலுவையைக் கொண்டிருக்கையில் அது கணக்கொழிப்பு நடவடிக்கைகளுக்குள்ளாகியது. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் இத் தொகையை ஊழியர் சேமலாப நிதியத்தால் அறவிட முடியாது போயிற்று. இது தொடர்பாக பதிலளித்த தொழில் ஆணையாளர் நாயகம் ‘‘ நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் அந் நிறுவனம் தொழில் ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளதாகவும்’’ அறிவித்திருந்தார்.

(2008 – 2.2.6 (உ) I)

(ஈ) தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று, 2007 செப்டெம்பர் 02 வரை ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகையைச் செலுத்தாமை தொடர்பாகப் பரீசீலனை மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறிருக்க அந் நிறுவனத்தின் சட்ட பூர்வத் தேவைகளை ஈடேற்றுவதற்கு ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகையை செலுத்தாதிருந்தமை சர்ச்சைக்குரியதானதால் தொழில் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி பிரகாரம் 2007 செப்டெம்பர் முதல் 2008 மே வரையான காலப்பகுதிக்கு மாத்திரமான ரூபா 18,449,928 உதவு தொகையையும் தண்டப் பணத்தையும் மாத்திரம் அறவிடுமாறு நிறுவனம்

கோரியவாறு 20 தவணைகளில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2013 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(2008 – 2.2.6 (உ) II)

(உ) 2005 முதல் 2008 வரையான காலப் பகுதியின்போது ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களது உதவு தொகை மற்றும் தண்டப்பணமாக வழக்குகளின் மூலம் அறவிடப்பட்ட தொகை ரூபா 62,571,668 ஆகும். இவற்றிக்குரிய அங்கத்தவர்களது சரியான தகவல்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் இல்லாமையால் அத் தொகையை அவர்களது தனிப்பட்ட கணக்குகளில் செலவு வைக்காது அரசிறையில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(2010 – 2.2.1 (அ) I)

(ஊ) மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களிலிருந்து உதவு தொகை மற்றும் தண்டப் பணம் என்பவற்றை அறவிடுவதற்கு வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, வழக்குகள் தொடரப்பட்ட போதும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, தவணை முறையில் கொடுப்பனவுகளைச் செலுத்தும் வசதி வழங்கப்பட்ட போதும் அவ்வாறு செலுத்தாது புறக்கணித்தமை, நிறுவனங்களைக் கணக்கொழிப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதிய தொங்கற் கணக்கில் உள்ள வைப்புகளை சரியான ''சீ'' அறிக்கைகளைப் பெற்றுத் தீர்த்து வைக்காமை, 2003 – 2006 காலப் பகுதியின்போது பெறப்பட்ட உதவு தொகை மற்றும் தண்டப் பணம் என்பவற்றை குறித்த அங்கத்தவர்களது கணக்குகளில் செலவு வைக்காமை மற்றும் தண்டப் பணத் தாமதத் தொகையை அறவிடாமை போன்ற ரூபா 313,452,501 சம்பந்தமாக அறிக்கை வெளியிட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் அவ்விடயங்களை உள்ளடக்கிய 2009 கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 3.2.5 பந்தியின் (ஈ) மற்றும் 2010 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 3.2.1 (இ) (iii) பிரிவுகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களையும் விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தபோதும், அவை தொடர்பாக 2012 திசெம்பர் 31 வரை பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தொழில் ஆணையாளர் நாயகத்திற்கும் இலங்கை மத்திய வங்கி அத்தியட்சகருக்கும் அறிவிக்கப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

### 5.1 இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

(அ) முதலீடுகள்

(ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகளை வெளி நபர்களிடம் ஒப்படைத்தல்

(இ) கணக்காய்விற்கான தகவல்களை வழங்குதல்

### 5.2 தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

(அ) கணக்கீடு

(ஆ) கணக்காய்வு நியமங்களைக் கடைப்பிடித்தல்

(இ) உதவு தொகையையும் தண்டப் பணத்தையும் அறவிடுதல்

(ஈ) நிலையான சொத்துக்கள்

(உ) தொழில் வழங்கும் நிறுவனங்களைப் பரிசீலித்தல்